பிரிட்டனின்

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மணி

...துரை M.A. MALAIMANI

(...டர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

...2—5—50) வெளியூர் (3—5—50) [இதழ் 241

...கட்சி அமைத்தனர் ... எம்.எல்.ஏ.க்கள்

...பிரதேச பார்லிமெண்டில் ...காங்கிரஸ் கட்சி" உதயம்

...ச காங்கிரஸ் ...ரி கட்சியி ...றுப்பினர்கள் ...ள் காங்கிரஸ் ...பெயரில் தமக் கட்சி அமைத் ... இக் கட் ...ாக சிங்

...பார்லிமெண்டரி கட்சியினர் கூடி, 3-மணி நேரம் ஆலோசித்தபின், காங்கிரஸ் செயற் குழு கட்டளைப்படி ராஜிநாமா செய்வதில்லையென்றும் முடிவு செய்தனர்.

21 காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியினர் காங்கிரஸ் கட்சியிலிருந்து 'அடங்காப் பிடாரிகள்' என தீர்மானிக்கப்பட்டு விலக்கப்பட்டனர். அப்படிப் பட்டவர்கள்தாம் மக்கள் காங்கிரஸ் கட்சி என்ற பெயரோடு ஒரு எதிர் கட்சியை அமைத்துக்கொண்டுள்ளனர்.

இக் கட்சியின் தலைவரான திரிலோகசிங், தமது ஆதரவாளர்களுடன் கலந்தாலோசிக்க டில்லி சென்றிருக்கிறார்.

மாணவர்கள் உண்ணாவிரதம்

...பூனில், மே. 1—

தங்கள் கோரிக்கைகளை சர்க்கார் கவனிக்காததினால் 48 மணி நேரம் உண்ணாவிரதம் இருப்பதென்று, ...விடோரா சர்வகலாசாலையைச் சேர்ந்த 1400 மாணவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

பர்மா எல்லைக்கருகில் கம்யூனிஸ்டு படைகள்

பர்மா, இந்தோ சீனா எல்லைகளை ஒட்டியுள்ளதும், சீனாவின் தென்கோடி மாகாணமுமான யுன்னானில், சீன கம்யூனிஸ்டுகள் துருப்புகளைக் குவித்துவருவதாகக் கூறப்படுகிறது. இங்கு கிடைத்துள்ள செய்திப்படி அவர்கள் 70,000 துருப்புகளை அங்கே வைத்திருக்கிறார்களாம்.

அத் துருப்புகளுடன் வந்த 500 சிவிலியன் அதிகாரிகளும், அரசியல் ஊழியர்களும் ஸ்தல நிர்வாகத்தை எடுத்துக் கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. —ருனே...

...ரிக்க... தலை... கிறது என்று எழுதப்பட்டிருந்ததும் ஒரு காரணம். ஆகவே, உள்நோக்கம் என்ன என்பது பற்றி அமெரிக்கர்களிடையே குழப்பமும், சந்தேகமும் அதிகரித்திருக்கிறது.

உண்மை என்னவெனில், இக்கடன்களைத் தீர்க்க ஏதாவது ஒரு வழி தேடும்படி அமெரிக்காதான் பிரிட்டனுக்கு யோசனை கூறியது. இத்தனை காலம் இந்த நகல் திட்டத்தைச்சமர்ப்பிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டது. இது விஷயமாக பிரிட்டிஷ் அமெரிக்க அதிகாரிகளிடையே பேச்சுவார்த்தை நடத்தினுல்தான்.

இந்த 7 மாதங்களாக பேச்சுவார்த்தைகள் நடந்துவந்த போதிலும், இதுபற்றி எவ்விவரமும் அமெரிக்கப் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

யுத்தக்கடன்களை அமெரிக்கத் தலையில் கட்ட சதித்திட்டமெதையும்பிரிட்டன் சமர்ப்பிக்கவில்லை என்பதை, வாட்டர் லிப்மன் ஒருவர்தான் வெளியிட்டார். மற்ற அதிகாரிகள் இவ்விஷயமாக ஏன் மௌனம் சாதிக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இதிலிருந்து அமெரிக்காவுக்கும பிரிட்டனுக்குமிடையே ஸ்டர்லிங் கடனபற்றி, ஏதோ ரகசியப் பேச்சு வார்த்தைகள் நடந்திருப்பதாக யூகிக்க இடமேற்படுகிறது.

தறபோதுள்ள நிலைமையில் பிரிட்டன், தன்னுடைய சுய ஆற்றலால் ஏதும் செய்ய முடியாதிருக்கிறது. சர்வதேச அரசியலில் ஏற்பட்டிருக்குப் குழப்பங்களில் சிக்கிக்கொண்டு அவதிப்பட இனி பிரிட்டனுல்

...பிரிட்டனின் நிலைமையை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள நினைக்கக்கூடும். அப்படி நினைக்குமானுல், பிரிட்டனின் கடன் சுமையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளுவதிலோ, பிரிட்டன் தன்னுடைய கடன் சுமையை அமெரிக்காவின் தலையில் சுமத்துவதிலோ ஆச்சர்யம் ஒன்றுமில்லை. பிரிட்டனின் கடனை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளலாம்; ஆனுல் அதே சமயத்தில் வேறுவிதத்தில் பிரிட்டன் அமெரிக்காவுக்குக் கடமைப்பட நேரிடும் என்பதில் ஐயமில்லை.

ஆக, இவை அனைத்தையும் திரட்டிப்பார்க்கையில்,மேற்கு வல்லரசுகள் ரஷியாவுக்கு எதிராக ஒன்று சேருகின்றன என்பதும் ஒருவாறு புலனுகும்.

இதாலிய கிராமத்தின் மீது குண்டு வீச்சு

லண்டன், மே. 1—

இதாலிய ஆல்ப்ஸ் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தின் மீது, மூன்று அடையாளம் தெரியாத விமானங்கள் 'மெஷின்கன்' பிரயோகம் செய்து சண்டையிட்டன வென்றுசெய்தி கிடைத்திருக்கிறது. கிராமவாசிகள் மிகவும் பயந்து பாதுகாப்பு இடங்களுக்கு ஓடிவிட்டனர்.

வெடி மருந்துகள் ஓடு சிதறியதால் மக்கள் சிதறி ஓடினர். இம் மூன்று விமானங்களில் ஒன்று, ஒரு கிராமத்தின் மீது குண்டுகளை வீசியதாகவும் கூறப்படுகிறது. இந்த கிராமம் ஆஸ்திரிய எல்லைக்கு 110 மைல் தூரத்திலுள்ளதாம்.

இதாலிய ராணுவ அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர்.

உணவுப் பிரச்னையைத் ... ஐ.நா. திட்டம்

—(0)—

கல்வி வளர்ச்சிக்கும் வழிகாணப்படும்

நியூயார்க், ஏப். 30—

பெருகிவரும் மக்கட் தொகைக்கு வேண்டிய அளவுக்கு உலக உணவு சப்ளையைப் பெருக்கவும் இரு ஐ நா. ஸ்தாபனங்கள் பிரசாரத் திட்டம் போட்டிருக்கின்றன. இவ்விரு ஸ்தாபனங்களில் ஒன்று 'யூனெஸ்கோ' (ஐ. நா. கல்வி கலாசார ஸ்தாபனம்) மற்றொன்று எப் ஏ. ஓ. ஐ. நா உணவு விவசாய ஸ்தாபனம்.

உலகில் சில நாடுகளில் ஏராளமாக உணவு குவிந்து வீணுகிப் போவதையும், சில நாடுகளில் மக்கள் உணவின்றி பட்டினியால் அவதிப்படுவதையும், எப்படிச் சரிப்படுத்துவது என்பதுபற்றியே இந்தஸ்தாபனங்கள் ஆலோசித்து வருகின்றன.

'யூனெஸ்கோ' ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரல் தோழர் டோரஸ் போடெட் கூறுவதாவது:—

உணவு-மக்கள் இப்பிரச்னை உலகிலேயே இன்றுள்ள முக்கியப் பிரச்னையாகும். உலக ஜனத்தொகை வருடத்திற்கு 20,000,000 அதிகமாகி வருகிறது. இவர்கள் பசியாற உணவு உறபத்திச் செய்தாகவேண்டும். ஆனுல், நாம் இப்பொழுதுள்ள மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருளையே உற்பத்திச் செய்வதில்லையே.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்பும், மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்குப் போதிய உணவு கிடைககாமல்தான் இருந்தது. ஆகவே, உணவு உற்பத்திக்கு விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும்முறையை சாக்கார்களும், மக்களும் நிறைவேற்றிவைககவேண்டும்.

கல்வி வரர

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனத் தலைவர் தோழர் நோரிஸ்டோட் கூறுகையில், உலக மக்களுக்குப் போதிய அளவுக்குக் கல்வி அறிவு புகட்டினுல் இந்தப்பெரும் பிரச்னை தீர்க்க வழி ஏற்பட்டுவிடும் என்று தெரிவித்தார்.

உணவு உற்பத்தி உண்டு

யூனெஸ்கோவின் தேசீய கமிஷன் மெம்பரும், ஐ நா விவசாய உணவு ஸ்தாபனத்தின அதிகாரியுமான ஸர்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

மேற்கு ஜெர்மனியில் துருப்புகள் தயார்

மே தின ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க முன்னேற்பாடு

பெர்லின், மே. 1—

மே தினத்தை யொட்டி ஏர்கனவே திட்டம் போட்டுள்ளபடி கம்யூனிஸ்டுகள் பெர்லினில் புகுந்து ஆர்ப்பாட்டப் செய்யுமபட்சத்தில், அதைத் தடுக்க மேற்கு ஜெர்மன் பகுதியில் மூன்று பிரிட்டிஷ் பட்டாளங்களும் 5000 அமெரிக்கத் துருப்புகளும் தயாராக வைக்கப்பட்டிருககின்றன

நிலைமை, போலீசாரின் கட்டுக்கடங்காமல் போய்விட்டதென்றுல்தான் துருப்புகள் உதவி கோரப்படும். (ருளோப்)

பாராளும் மன்றத்தில் பலப்பரீட்சை!

லெபனில் பார்லிமெண்ட் சரித்திரத்திலேயே முதல் தடவையாக இரு மெம்பர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டுவிட்டனர்.

ஹமீத்பே பரங்கேயும், ஹபீப் அபூ ஷாஹ்லாவும்தான் கைகலந்ததாக கூறப்படுகிறது.

டிரிபோலியில் சங்கமில்லாத ஒரு பகுதியை ஏற்படுத்த வேண்டும் என்பது விஷயமாக ஏற்பட்ட அபிப்பிராய பேதமே இந்த சச்சரவுக்குக் காரணமாம்.

மாலை ம

சென்னை 2—5—50

வேண்டாம் வீண்

"உத்தியோகங்கள் வழங்கும் விஷயத்திலும், உத்தியோக உயர்வுதரும் முறையிலும், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படும் விஷயத்திலும் சென்னை சர்க்கார் வகுப்புவாரி விகிதாசாரமுறையைக் கடைப்பிடிப்பதானது இந்திய அரசியல் திட்டத்தின் 14 முதல் 17 வரையிலும் 29-வது திட்டத்தையும் தகர்த்தெறியக் கூடியதாக இருக்கிறது."

இது உண்மையில் மயிலாப்பூரில் கே. எஸ். இராமசாமி சாஸ்திரியார் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய பிராமண சேவாசங்கப் பொதுக்கூட்டம் ஒன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்!

வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையைப் பார்ப்பன தோழர்கள் எதிர்ப்பது, கண்டிப்பது, கண்டித்துதீர்மானங்கள் நிறைவேற்றுவது போன்ற ஆர்ப்பாட்டங்கள் இன்று நேற்றல்ல, என்று இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை தோன்றிற்றோ, அன்றே இவர்களுடைய எதிர்ப்பும் தோன்ற ஆரம்பித்துவிட்டது. அதன் ஒரு கூறே மயிலைவாசிகளின் தீர்

...கவே, இதுகண்டு நாம் ஆச்சர்யமோ, கவலையோ கொள்ளத் தேவையில்லை எனினும் ஆர்ப்பாட்டக்காரர்களின் போக்கு கண்டு ஆட்சியாளர் சித்தம் தடுமாறக்கூடும் என்ற ஐயப்பாட்டின் காரணமாக, ஒரு சில கூறவேண்டிய அவசியத்துக்குள்ளாகின்றோம்.

இந்திய அரசியல் திட்டத்தின் ஒரு சிலப் பகுதிகளைச் சுட்டிக்காட்டி, அவற்றின்படி வகுப்வாரிப்பிரதிநிதித்வமுறை அரசியல் திட்டத்தையே மீறுவதாகும் என்று, அந்த அந்தணப் பெருமக்கள் கூறுகின்றனர்.

இது ஆரியத்தின் பரம்பரை சூழ்ச்சித் திட்டங்களில் ஒன்று. அதாவது சாம, தான, பேத, தண்டம் என்னும் உபாயங்களால் காரியசித்தி பெறுவது போல் இப்பொழுது சட்டத்தைக் காட்டி பயமுறுத்த ஆரம்பித்துள்ளது.

அவர்கள் கூற்றுப்படியே வகுப்பு விகிதாசாரப்படி உத்தியோகங்கள் வழங்குவதோ, கல்லூரிகளில்மாணவர்களுக்குஇடமளிப்பதோ கூடாததாமாகவே இருககலாம். ஆனால், ஈண்டு நாம் சுட்டிக்காட்ட விரும்புவது அந்த சட்ட நியாயமன்று. ஏனெனில்,இன்றைய சமுதாய அமைப்பிலே, சூழ்நிலையிலே அந்தச் சட்ட நியாயம் தர்ம நியாயத்தோடு ஒத்துழைக்க இயலாது.

சட்டத்திலே வகுப்பு வேற்றுமை காட்டுதல் கூடாது என்றிருக்கும் ஆனால் வகுப்பு வேற்றுமைகளையு... றின் அடிப்படையி... றிய கொடுமைகளைய... வழிவகைகள் காட்ட... ராது. அப்படிப்பட்ட ச... வாழ்ந்தோரை மேலும் மேலு... வாழவைக்கவும், தேய்ந்தோரை மேலும் மேலும் தேயவைக்கவும்தான் பயன்படுமேயன்றி, இருசாராரையும் சமநிலைக்குக்கொண்டுவரப் பயன்படாது. அங்ஙனம், மக்களின் வாழ்க்கையில் சமநிலைகாண முடியாத சட்டம் சட்டமாகாது

எனவேதான் நாட்டு நிலை, மக்கள் நிலை அறிந்து முப்பது ஆண்டுகட்கு முன்னரே வகுப்பு விகிதாசாரப்படி உத்தியோகம் வழங்கவும், கல்வி நிலையங்களில் மாணவர்க்கு இடமளிக்கவும் ஆன முறையில் நல்லறிஞர் சிலர் கூடி, வகுப்புவாரி பிரதிநிதித்வ சட்டம் செய்தனர்.

இச்சட்டம் செய்யப்படாதிருந்திருக்குமானால் பார்ப்பனரல்லாதார் ஓர் அடிகூட முன்னேறியிருக்க முடியாது. அப்படிப்பட்டதோர் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதே பார்ப்பனரல்லாதார் மு... னேற்றப் பாதையில் மு... வேகத்தோடு செல்லமுடியவில்லையென்றால், அறவே அத்தகையசட்டம் ஒன்று இல்லையென்றால் அவர் தம் நிலை என்னுகியிருக்கும் என்பதைச் சற்றுசிந்தித்துப்பார்க்கவேண்டும்.

எனவே, வகுப்புகள் உள்ள வரை, வகுப்புகள்காரணமாக ஏற்பட்ட உயர்வு தாழ்வும், அதன் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வும், அதுகாரணமாகவாழ்க்கை வசதிகளில் ஏற்றத் தாழ்வும், உள்ளவரை வகுப்பு வாரி பிரதிநித்வமும் இருந்தேதீரும். அதனை அசைக்கவோ, அழிக்கவோ யாராலும் முடியாது. அந்தணர் குழாம்கள் அடுத்தடுத்துக்கூடி அடுக்கடுக்காய் தீர்மானங்களை நிறைவேற்றினாலும் சரி, அரசியல் சட்டங்களைக் காட்டி அரசியலாரை மிரட்டி அதன் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைச் செல்லாக்காசாக்கமுயன்றாலும் சரி, எம்முயற்சியாலும் எத்தகைய பயனும் விளையப் போவதில்லை!

வகுப்புவாரிப் பிரதிநித்வத்தை ஒழித்துக்கட்ட பார்ப்பன தோழர்கள்மேற்கொண்ட முயற்சிகள்கொஞ்சநஞ்சமல்ல. பேசிப்பார்த்தனர், எழுதிப்பார்த்தனர், அரசியலாருக்கு மகஜர் அனுப்பிப்பார்த்தனர், இத்தனைபடலங்களாலும் அவர்கள்எதிர்பார்த்தபலன்கிட்டாதகாரணத்தால்,இறுதியாகச் சட்டத்தின் துணையை நாடு கின்றனர் போலும்! நாடட்டும்; ஆனால் ஒன்று; திராவிட மக்களின் உரிமையைப் பறிக்க

இ... நி... னில்... முறை... இல்லை... திராவி... பிரச்னை. மானச் ... படுகிறது. மானச் கி... நேரி மான... சுடன் அ... அதன்விளை... போராட்டம... மாறக்கூடும்... தக்கதா எ... லாரும், அ... யோசித்துப்ப... கிறோம்.

...வசப்படுத்த

கம்யூனிஸ்டு திட்டம்

லண்டன், மே. 1—

உலகில் பல துறைமுகங்களில் இரண்டாண்டாக ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தம், லண்டனில் ஏற்பட்டுள்ள துறைமுகத் தொழிலாளர் ஸ்டிரைக் இவைகள் எல்லாம் கம்யூனிஸ்டு திட்டத்தின் ஒரு பகுதி என்று, நிச்சயமாகத் தெரிய வருவதாக 'ஸண்டே டெஸ்பாட்ச்' நிருபா கூறுகிறார்.

மூன்று முக்ய நோக்கங்களை கொண்டே, இத்திட்டம்வகுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அவை,

(1) அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளுக்கு அமெரிக்காவிலிருந்து வரும் ஆயுதசப்ளையை கிடைக்க முடியாமல் தடுப்பது.

(2) கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளின் பொருளாதாரம் சீர்குலையும்படி செய்வது.

(3) யுத்தம் ஏற்பட்டாக வேண்டிய அவசியம் ஏற்பட்டால், இத்துறைமுகங்களை ரஷ்யாவுக்குச் சாதகமாக உபயோகிப்பது.

கம்யூனிஸ்டுகள் இப்பொழுது முக்கியமாக, பின் கண்ட நாடுகளின் துறைமுகங்களிலேயே கவனம் செலுத்துகின்றனர்: பிரான்ஸ், பெல்ஜியம், இதாலி, வட ஆப்பிரிக்கா, யு. எஸ்-ஸின் பஸிபிக்கடற்கரை, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து. (ருனேப்)

—

"12000 பேர்களுக்குமேல் கொண்ட ஆஸ்திரேலிய கம்யூனிஸ்டுகட்சி பலாத்காரம், பயமுறுத்தல், மோசடி இவைகளின் மூலம் ஆஸ்திரேலியா ஜனநாயகசர்க்காரைக்கவிழ்க்க முயன்றது" என்று விக்டோரியா சர்க்கார் நியமித்துள்ள கமிஷன், ஆஸி கம்யூனிஸ்ட் கட்சிகுறித்துசமர்ப்பித்துள்ள ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறது

இக்கட்சிக்குப்பணஉதவியும், இதர உதவிகளும் ரஷ்யாவிலிருந்து கிடைத்துவந்தது என்பதும ருசுபிக்கப்பட்டிருப்பதாக இந்த ரிப்போர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது.

5 வது மாடியிலிருந்து விழுந்த குழந்தை

தப்பிப்பிழைத்த அதிசயம்

நியூயார்க், மே. 1—

75 அடி உயரமுள்ள 5வது மாடியின் ஜன்னலிலிருந்து தவறிவிழுந்த குழந்தையை வழிப்போக்கர் ஒருவர் கவனித்து தக்சமயத்தில் குழந்தையைக் கீழே விழாமல் ஏந்திகொண்டார். சில கீரல்களுடன் குழந்தை தப்பியது.

முத்தத்தால் அதிர்ச்சி!

ஒருவர் தன் காதலியை முத்தமிட்டபோது, அவன் அதிர்ச்சியடைந்து அலறி குதித்தாளாம். காரணம் அவன் காதல் ஒரு மின்சார ஸ்விட் மீது சாய்ந்துகொண்டிருந்ததுதான் என்பது பின்னர் தெரிந்தது.

ஸ்பெயினுக்கு யு. எஸ். கடன் உதவி

மாட்ரீட், மே 1—

அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி பாங்கிக்கு (50,000,000 டாலர்) கடன் உதவி அளிககும்படி ஸ்பெயின் நேர்முகமாக மனுச்செய்துகொள்ளலாம் என்று தெரிகிறது அது கிடைத்துவிட்டால், மேலும் டாலருக்குக்கடன்கேட்கப்படுமாம்.

யு. எஸ். பிரிஸிடெண்ட் ட்ருமன், அகிசன், செனட் அயல்நாட்டு விவகாரக் கமிட்டித்தலைவர் டாம்கானலி இவர்கள் மூன்றுபேர்களும் சந்தித்துப் பேசியதின் விளைவாக, கடன் கிடைத்துவிடலாம் என்ற நம்பிக்கை இங்கு ஏற்பட்டிருக்கிறது.

நட்சத்திரங்களின் ரகசியங்கள்

நட்சத்திரங்களைப் பற்றிய சில ரகசியங்களை வெளியிடுவதில் பிரிட்டன் முந்திக்கொள்ளும் என்று தெரிகிறது. ஸ்காட்லாந்திலுள்ள ஸெயிண்ட் ஆண்ட்ரூஸ் சர்வகலாசாலையில் வான சாஸ்திர இலாகாவுக்கு வரப்பேபுது தூரதிருஷ்டிக் கண்ணாடி (டெலஸ்கோப்) மூலம் இது சாத்யம் என்று தெரிகிறது.

சுரங்கத் தொழில் பாதுகாப்புக் கமிட்டி

நிலக்கரி சுரங்கத் தொழில் பாதுகாப்புக் கமிட்டி மே 5-ந் தேதிதான் பாதில் தொழில் இலாகா காரியதரிசி தோழர் வி. கே. ஆர். மேனன் நடைபெறவிருக்கிறது.

தலைமை நிலைய
...ட்டிட நிதி

		ரூ அ. பை.
(நேற்று வந்துள்ளபடி)		1760—12—6
...லாசாமி, கோவை		10—0—0
...ருசாமி,	,,	5—0—0
...பன்,	,,	5—0—0
...ாரி,	,,	2—0—0
...ண்ணன்,	,,	5—0—0
...ப்பிரமணியன்,	,,	5—0—0
...லையா,	,,	5—0—0
... குமாரசாமி,	,,	5—0—0
...பானனுசாமி,	,,	10—0—0
...எஸ். வேலாசாமி	,,	5—0—0
சி. ஆர். மல்லிகார்ஜுனன் அண்டு பிரதர்	,,	11—0—0
கே. சிவசாமி,	,,	3—0—0
எம். பட்டிலிங்கம்,	,,	2—0—0
பி. வீரபத்திரன்.	,,	5—0—0
பி. நாராயணசாமி,	,,	5—0—0
ஒரு அன்பர்,	,,	10—0—0
பி. ராமச்சந்திரன்,	,,	2—0—0
		1855—12—6

...ர் மீது
...முயற்சி

...வருவாரில்லை

...மீது குண்டு ...மற்றி வோலீ... விசாரித்து ...து முன் நடை... ...ச்சு சம்பவம் ...தகவல் தெரி...வில்லை.

...வரி',

...மேலும்...
களையே காங்கிரஸ்தலைவர்கள் பின்பற்றுகிறார்களென்றும், கவர்னர் மாளிகைகளில்ஆடம்பர வாழ்வு சிறிதுகூடக் குறையவில்லையென்றும் அவர் கண்டித்துப் பேசினார்.

காங்கிரஸ்காரர்கள் பொதுவாக லஞ்ச ஊழல் நிறைந்தவர்களாகிவிட்டார்களென்றும், இதனால் காங்கிரஸின் பொரேபட்டுவிட்டதென்றும் அறிவித்தார்.

நாளுக்குநாள் மக்கள் தங்கள் உரிமைகளை நன்கு உணர்ந்து வருகிறார்களென்றும், அரசாங்கம் உற்பத்தியைத் தகுந்த முறையில் அதிகப்படுத்தினாலன்றி நாடு முன்னேற வழியில்லையென்றும் அவர் அறிவித்தார்.

சிங்கப்பூரில் இந்திய வர்த்தக நிலை

சிங்கப்பூர், மே. 1—

சிங்கப்பூரில் இந்திய வர்த்தகத்தின் எதிர்காலம் அவ்வளவு நம்பிக்கை அளிப்பதாக இல்லை என்று இந்திய வர்த்தக சபையின் தலைவர் பதவிலிருந்து விலகிக்கொள்ளும் சர்தார் ஹரிராமானிசிங் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—அக்கம் பக்கத்திலுள்ள தீவுகள் மலேயாவிலிருந்து பொருள்களை வாங்கும் வரைக்கும் வியாபாரம் நன்றாகவே நடைபெறும். சிங்கப்பூரிலிருந்து அதிகப்பொருள்களைப் பெறும் இந்தோனேஷ்யா சப்ளை செய்யும் நாடுகளுடன் நேரிடை தொடர்பு வைத்துக்கொண்டால் நம்வர்த்தகம் பெரும் அளவுக்குப் பாதிக்கப்படும்.

வருஷா வருஷத்திற்கு இந்திய வர்த்தக சபையின் புதுத்தலைவராக ஜுமாராம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அர்ப்பு ஏசேக்கும் பொட்டி... வீச விடுவதென்று போலீஸ் திட்டம் போட்டிருக்கின்றனர்.

10 டோகோபர் பெண் கோர்ட்டில் பல குற்றங்களை விசாரிக்கப்பட்டுவருகையில் அவர்கள் திடிரென ஆடைகளைக் களைந்து பிறந்த மேனியாக நின்றனர். உடனே போலீஸ்காரர்கள் இவர்களை சிறைக்கு அனுப்பினர்.

இலங்கை இந்திய வர்த்தகம்

கொழும்பு, மே. 1—

1950-ம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் இலங்கைக்கு ரூ. 6 கோடி வரை வர்த்தகம் மூலம் லாபம் கிடைத்திருக்கிறது.

இலங்கையின் முக்ய இறக்குமதிப் பொருள்கள் பிரிட்டனிலிருந்து கிடைக்கிறதென்றாலும், மார்ச் மாதத்தில் இந்தியாவிடமிருந்தே அதிகப் பொருள்கள் இறக்குமதியாகியிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து உலர்ந்த மீன்கள், முட்டைகள் முதலியன முக்யமாக தருவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கு முட்டைகள் இந்தியாவிலிருந்து மட்டுமே கிடைக்கின்றன.

இனி நடப்பவை

வாலாஜா தாலுகா:—திருக்குறள் பிரசாரக் குழுவினரான தோழர்கள் துரைசாமி, மாணவமணி, புலவர் ஆ. மணிஎழிலன், அ. இளங்குமரனார் ஆகியோர் பல ஊர்களில் திருக்குறள் பிரசாரம் செய்துவிட்டு, மீண்டும்தொடர்ந்து மே 3 சாவை, மே 4 கலவை, மே 5 ஆற்காடு ஆகிய ஊர்களுக்கு செல்வார்கள். மற்ற ஊர்க்காரர்களும் அருள்கூர்ந்து கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து செயலாளர் திருக்குறள் பிரசாரக்கமிட்டி ஆற்காடு என்ற முகவரிக்கு அறிவிக்க.

...

சென்னை போஸ்டுமாஸ்டர் ஜெனரல் கீழ்க்காணும் அறிக்கையை விடுத்துள்ளார்:—

முன்னரே அறிவித்துள்ளபடி மே 1-ம் தேதி முதல், எல்லாக்கிழமைகளிலும் தந்தி ஆபீஸ்கள்மூலம் 'எக்ஸ்பிரஸ்' டெலிவரி அனுப்பப்படும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் எக்ஸ்பிரஸ் டெலிவரி கடிதங்கள் தற்காலிகமாகமாவட்டத் தலைமை அலுவலகங்களில் உள்ள தந்தி ஆபீஸ் மூலம் அனுப்பப்படும்.

எனவே, தபால் பெட்டிகள் வில்லசமிட்டு அனுப்பப்படும் கடிதங்கள் பட்டுவாடா செய்யப்படமாட்டா வென்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ளவேண்டுகிறேன்.

உணவுப்பிரச்னை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெர்பர்ட் பிவிட்லி கூறுவதாவது.

ஜனத்தொகை எவ்வளவு துரிதமாகப் பெருகுகிறதோ அவ்வளவுக்கு மெதுவாக உணவு அதிக உற்பத்தி நடைபெறுகிறது. 1960-ல் அதிகரித்துள்ள ஜனத்தொகையினருக்காக அதிகப்படியாக 60,000,000 டன் நவதானியங்கள், 30,000,000 டன் இரைச்சி, 250,000,000 டன் பழவகைகள், 35,000,000 டன் பால் இவை தேவையாகஇருக்கும். இருந்தாலும் இப்பிரச்னையை நாம் வெற்றிகரமாகத் தீர்க்க முடியும்.

விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்து ஒரு ஏக்ருக்குக் கிடைக்கும் தானியத்தைப் பெருக்கலாம். தவறான உபயோகத்தினால் மோசமாகப் போன நிலங்களைச் சீர்படுத்தி பண்படுத்தலாம். ஏராளமான ஏகர் தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரலாம்.

நாடகக் கழகக் கேளிக்கைகள்

—————(0)—————

முதல் பகுதி முடிவடைந்தது

சென்னை, மே. 1—

சென்னை நாடகக் கழகத்தின் முதல் பகுதி நாடகங்கள் நேற்று மாலை நடந்த "நாம் இருவர்" நாடகத்துடன் முடிவடைந்தது.

தமிழ்நாட்டில் பண்டை தொட்டுத் தெருக்கூத்துகள் நடத்தப்பட்டு வந்தனவென்றும், திறந்த வெளிக் கொட்டகையில் நாடகம் நடத்துவது ஏற்றேறக்குறைய தெருக்கூத்துக்கு ஒப்பிடலாமென்றும் "நாம் இருவர்" நாடகத்துக்குத் தலைமை தாங்கிய மராமத்து மந்திரி தோழர் எம். பக்தவத்சலம் கூறினர். நாடகக் கழகம் மாகாணத்தின் மற்றப்பகுதிகளிலும், நாடகக் கழகங்களின் கிளைகளை ஏற்படுத்தி நாட்டுப்புற மக்களும் குறைந்த செலவில் நாடகங்களைக் காணும் ரபிப்பை உண்டாக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

கேளிக்கை வரியை அரசாங்கம் ரத்துசெய்துவிட வேண்டுமென்று வற்புறுத்த, நாடகக் கழகத்தின் சார்பில் ஒரு தூதுகோஷ்டி முதல் மந்திரியைப் பேட்டி காணுமென்று தோழர் சினன அண்ணாமலை கூறினர். தூதுகோஷ்டிக்கு நாடகக் கழகத்தின் தலைவர் தோழர் டி. கே. ஷண்முகம் தலைவராகஇருப்பாரென்றும், தோழர்கள் ரா. கிருஷ்ணமூர்த்தி, ஏ. வி. மெய்யப்பச்செட்டியார், கே. சுப்பிரமணியம், சிவதாணு, கே. சாரங்கபாணி, என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர், ஜி. கே. சேஷகிரி, நவாப் ராஜமாணிக்கம் ஆகியவர்கள் அங்கத்தினர்களாக இருப்பார்களென்றும் அவர் அறிவித்தார்.

தோழர் டி. கே. ஷண்முகம், நாடகக் கழகம்வெற்றிகரமாக நாடகங்களையும் நாட்டியங்களையும் நடத்த உதவி செய்த பல சங்கங்களையும், தனிப்பட்டோரையும் பாராட்டிப்பேசி, நன்றி தெரிவித்துக்கொண்டார். பொதுமக்கள் அளவு

மீண்டும் ஐ. நா.-வில் பாலஸ்தீன பிரச்னை

ஜெருசலத்தை சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் விட வேண்டும் என ஐ. நா. தீர்மானத்திற்கு, ரஷ்யா அளித்திருந்த ஆதரவை வாபஸ் பெற்றுவிட்டது. பாலஸ்தீன பிரச்னை மீண்டும் ஐ... முன்பு போகவேண்டு... பதுதான் அர்த்தம் எ... ஐ. நா. தர்மகர்த்த கௌன்ஸிலின் ஸிரிய பிரதிநிதியான மெயிட்ரே அகமத் ஷுக்ரி தளோப் நிருபரிடம் கூறினார்.

ஜெருசலம் பற்றிய அத்தீர்மானம் பாலஸ்தீன பிரச்னையிலிருந்து தனியாக பிரிக்க முடியாததாகும் என்றும் அவர் கூறினார்.

'ஐ.நா. சமரசக் கமிஷன்தன் முயற்சியில் தோல்வியடைந்து விட்டதாகவே நான் கருதுகிறேன். அது தன் தோல்வியை ஐ நா. விடம் வெளியிடும் என்றும் எதிர்பார்க்கிறேன்' என்று அவர்கூறினார்.

———

பாரிஸில் பெண்கள் குஸ்தி!

அழகிய யுவதிகள் நீச்சல் உடைகளை அணிந்து, குஸ்திப்போடுவது ஒரு புது பொழுதுபோக்காக இங்கு ரஸிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆதரவு தந்ததற்காகக பெருமகிழ்ச்சி யடைந்ததாகக் கூறி, இரண்டாவது பகுதி கேளிக்கைகளுக்கு உடனே ஏற்பாடு செய்வதாகக்கூறி பக்கள அமைதியாக நடந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தோழர் ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் ரூ. 2501 நாடகக் கழகத்துக்கு நன்கொடை அளித்திருப்பதாகத் தோழர் ஷண்முகம் அறிவித்தார்.

9-30 மணிக்கு "நாம் இருவர்" நாடகம் சிறப்பாக முடிவடைந்தது.

கடமையை செய்…

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்…

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா…

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்…

தலைமைக் காரியாலயம் ! உடனே … லொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெருது எல… வரும் கூறினீர்கள் !

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வே… என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே !

வற்புறுத்திய நண்பர்களே !

ஆர்வம்காட்டிய அன்பர்களே !

யோசனை கூறிய தோழர்களே !

உ ங் க ள்
கடமையைச் செய்தீர்களா ?

ஆண்டு முழுவதும் நெல் சாகுபடி செய்யலாம்

—————(0)—————

பண்ணை ஆராய்ச்சியில் கண்ட உண்மை

—————(0)—————

சென்னை வக்கீல் கூறும் விவரம்.

சென்னை, மே. 1—

“நெல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே விளையக்கூடிய தானியம் என்று சொல்வது தவறு. என்னுடைய பண்ணை ஆராய்ச்சிலிருந்து நெல் சாகுபடியை வருடம் பூராவும் செய்யலாம் என்பதைக் கண்டுபிடித்…றேன். ஆனுல் வேண்டுவ… போதிய தண்ணீர் சப்ளை…று ஆத்தூர் கிராமத்தில் … ஆராய்ச்சி செய்துவரும் …னை வக்கீல் தோழர் ஆர். மாத்ருபூதம் குளோப் நிருபரிடம் கூறினுர்.

ஆத்தூரில் 40 ஏகரா நிலத்தில் விளைந்திருந்த நெல் தானியம் சாவியாகப்போய்விடாதபடி, அந்தக்கிராமவாசிகள் எப்படிஒத்துழைத்துக் காப்பாற்றினுர்கள் எனபதையும் அவர் விளக்கினுர்.

ஆத்தூர் என்பது செங்கற்பட்டுக்கு மூன்று மைலிலுள்ள மானமபாத்த சீமை கிராமம். இதில் தோழர் மாதருபூதம் 200 ஏகரா நிலத்தில் தன பணணை ஆராய்ச்சியை நடத்தி வருகிருர். 100 கால் நடைகள் கொண்ட ஒரு பண்ணையையும் இவர் நடத்தி வருகிருர். இந்தக் கிராமத்தில் பெரும்பாலோர் ஹரிஜனங்கள. சென்னை சர்க்கார் கொள்முதல திட்டத்திற்கு இவருடைய பணணை 30டன் தானியத்தைக் கொடுத்திருககிறது.

அவர் கூறியதாவது:—பருவ மழை தவறிவிட்டதால் இக்கிராமத்திலுள்ள குளம், குட்டை எல்லாம் வறண்டுவிட்டன. 40 ஏக்கர் நிலத்தில் விளைந்திருந்த சம்பாதானியத்திற்கு மற்ருெருமுறை தண்ணீர்பாய்ச்சஇல்லையேல அவ்வளவும் சாவியாகப்போய் விடும் நிலைமையில் இருந்தன.

கிராமத்திற்கு இரண்டரைமைல் தூரத்தில் ஒருகுட்டையில் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீரை எப்படியாவது உபயோகிப்பது என்ற முடிவுக்கு வந்தோம். இந்த இரண்டரை மைல்தூரத்திற்குக் கால்வாய் வெட்டி தண்ணீர் இறைப்பதில் அக்கிராமவாசிகள் எல்லாரும் ஒத்துழைத்தனர். இதனுல் அவ்வளவு தானியமும் பிழைத்தது.

இவ்விஷயத்தில் சர்க்காரின் உதவி எதுவும் கிடைக்கவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம் என்றும் அவர் கூறினுர்.

அரை நிர்வாண காட்சிகளுக்குத் தடை

ஒரு பிரெஞ்சு நடிகை டெனிஸ்டார்ஸல் என்பவர், மிகவும் குறைந்தபட்ச உடையில் ஒரு டெலிவிஷன் ஸ்டுடியோவில் ஆஜரானுராம். காமிரா அவர் பக்கம் திருப்பப்பட்டு படம் பிடிக்கப்பட்டபோது, அவருடைய தோள்மீதிருந்த பட்டை கழன்றுவிட்டதாம். இம்மாதிரிக் காட்சியை ஆட்சேபித்துபெற்றோர்களிடமிருந்தும், சில ஸ்தாபனங்களிலிருந்தும் ஏராளமாகக்கடிதங்கள் மறுநாள் குவிந்துவிட்டதாம்.

இம்மாதிரி அசந்தர்ப்பம் ஏதாவது ஏற்பட்டுவிட்டால், அங்க அழகுகளை மறைக்க மலர்க்கொத்துக்களைத் தயாராக வைத்திருக்க ஸ்டுடியோக்கள் ஏற்பாடுசெய்திருக்கின்றன.

(குளோப்

சீனுவில் 5000 ஐரோப்பியர்கள்

ஹாங் ஹாங், மே. 1—

சீனுவில் இன்னும் 5000 ஐரோப்பியர்கள் இருந்து வருவதாகத தெரிகிறது. ஷாங்கேயில்சுமார் 2000பிரிட்டிஷார் யுத்தம் முடிந்ததும், நல்ல காலம் ஏற்படாதா என்றுஎதிர்பார்த்துககஷ்டங்களைச் சகித்துக்கொண்டு இருந்து வருகின்றனராம்.

—குளோப்

உலகில் சர்க்கரை விலை குறையலாம்

கொழும்பு, மே 1—

உலகில் எங்குமே சர்க்கரை விலை குறையலாம் என்று, இலங்கை உணவு மந்திரி காரியாலயத்தைச சேர்ந்தவர்கள் ‘ஜோஸ்யம்’ கூறுகின்றனர்.

இலங்கைக்கான சர்க்கரை க்யூபா, ஸான் டொமினிகோ மாருதீஸ் முதலிய இடங்களிலிருந்து தாராளமாகக் கிடைக்கிறது.

இ… இரா… வர்றி… பிரெஞ்ச… மின்னல்… அறிவிக்க…

க… யூனி… பெற்று தே… கிறிஸ்கும… படைகளு… பிரெஞ்ச, … இங் ஒரு… இவ்கொப்பர்… திருக்கிறது. . … கன் மஜி அன்… மகோதாய் தம… பது நிலைவிருக… நடைபெற்றிரு… இன்மடி பிரெ… தின் மூலம் அ… வினியோகி…

… அது பற்றி விசாரம் ஒன்றும் நடத்தவில்லை யென்று அவர் அறிவித்தார்.

குனமான மங்கையின் காதல்பைத்தியம்!

மிலே ஆர்மாண்ட் என்கிற உடல் பருத்த யுவதிக்கு காதல் பைத்தியம ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் ஒரு ஜோஸ்யனிடம் கைகாட்டிய போது உடம்பு இளைத்தால் ஒழிய அவள் கருத்து கைகூடாதென்று அவன் சொல்லிவிட்டான்.

மந்திரத்தின் மூலம் உடம்பை இளைக்க வைக்க முடியும் என்று அந்த ஜோஸ்யன் சொல்லி நம்ப வைத்ததின் பேரில் பணத்தை அந்த யுவதி செலவிட்டாள். 6 வாரமாகியும் எவ்வித பலனும் ஏற்படாமல் போகவே அந்த ஜோஸ்யன் மீது போலீசாரிடம் புகார் பதிவு செய்திருக்கிருள்.

உயரமும் பருமனும் ஆபத்தானதே

…ராட்டர்டாமைச் சேர்ந்த ரீசர்ட் கிஜின் ஹூட் என்பவருக்கு வயது 26 தான் ஆகிறது. அவர் $27\frac{1}{2}$ ஸ்டோன் எடை இருக்கிருர். உயரம் 7 அடி $1\frac{1}{2}$ அங்குலம்.

இந்த உணவுப் பஞ்சக் காலத்தில் அவருக்கு ஏராளமாக உணவு வேண்டியிருக்கிறது. அவர் சாதாரணமாக 5 முட்டைகள் 21 ரவுண்டு ரொட்டி $1\frac{1}{2}$ பவுண்டு மாமிசம் சாப்பிடுவது வழக்கமாம்.

அவர் உபயோகிக்க எதுவேண்டுமென்றுலும் அவருக்காக ஸ்பெஷலாக செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஏதாவது வேலை செய்ய வேண்டுமென்றுலும் அதற்கு அவர் உயரம் இடையூருக இருக்கிறதாம்.

2…—4—… மாலை 1-மணிக்கு ஈரோடில் இயற்கையெய்தினுர் என்று தெரிய வருகிறது.

இளங்கோ மன்றம்

23—4—50 மாலை தி. மு. க. கட்டிடத்தில் தோழர் மை. அ. முருகேசன் அவர்கள் தலைமையில், நடைபெற்றகூட்டத்தில் இளங்கோ மன்றம் நிறுவப்பட்டது. மேற்படி மன்றம் தி. மு. க, கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு பணியாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டுக், கீழ் கண்ட செயற்குழு வைத்தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஆ. இராசலிங்கம் விளம்பர உறுப்பினர்:—கு. இரத்தினம் பொருள்உறுப்பினர்:—எம். எஸ். முருகேசன்.

ஏனைய செயற்குழுவினர், —எஸ். எஸ். சத்தியமூர்த்தி, கே. என். இராசவேலு, எம். நடராசன், கே. சுப்பிரமணியம், எஸ். ஆறுமுகம். வி. பழனியப்பன், அ. இரா. துரைசாமி.

இளைஞர் முன்னேற்றக் கழகம்

சென்னை, ஏப். 26—

21-4-50 இரவு சேர்தப்பட்டு இளைஞர் முன்னேற்றச் சங்கஇரண்டாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு, சிந்தாதரிப்பேட்டை மறுமலர்ச்சி நாடக மன்றக்குழுவினரால் ‘பலி பீடம்’ என்ற சமூக நாடகம் தோழர் ஜே. டி. துரைராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நாடக மன்றத் தலைவர் தமிழழகன் அவர்களிடம் இ.மு.ச. சார்பில் ஒரு வெள்ளிக்கோப்பை பரிசளிக்கப்பட்டது. தோழர்கள் பி. தேவராசன், க. பொன்னுரங்கம் நடிப்பைப் பாராட்டி தலைவர் சொற்பொழிவாற்றினுர். தோழர் பி. ரங்கநாதன் நன்றிகூற நாடகம் வெற்றிகரமாக முடிந்தது.

பாரதி கழகம்

சாலேஸிப்பாக்கம், ஏப். 12—

இவ்வூர் ஆரம்ப ஆண்பாடசாலையில், திருமண ஓராண்டு குறித்து

…விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் தயாநிதி தலைமைவகித்தார். தோழர் எட்வர்ட் ஜேக்கப் கொடியேற்றினுர். தோழர் எம். என். ராஜி சொற்பொழிவாற்றினர். இறைவர் சித்தண்மக்குப் பின் கூட்டம் இனிது முடிந்தது.

திருக்குறள் சொற்பொழிவு

வெங்கனிவேடு, ஏப். 25—

23-4-50 தேதி மாலை திருக்குறள் ஊர்வலம்நடைபெற்றபின், தோழர் வரதராசன் தலைமை வகித்தார். திருக்குறள் பிரச்சாரக்குழுவினரான தோழர்கள் புலவர் ஆ. மணி எழிலன், அ. இளங்குப்பனுர் ஆகியோர் பேசியபின், கூட்டம்இனிது கலைந்தது.

திமிரியில் 24-4-50 காலை தொழிற்சாலை புதுமனைபுகுவிழா நடந்தது. திமிரி ஜாகீர்மை அதிகாரி தலைமைவகித்தார். சிலபேசியபின், தாலுகா திருக்குறள் பிரசாரக்குழுவினரான புலவர் ஆ.மணி எழிலனுர், இளங்குப்பனுர்ஆகியோர் திருக்குறளும் தொழிலாளர்கடமையும என்பது பற்றிப் பேசியபின் இனிது முடிந்தது.

வள்ளுவர் வாசகசாலை

நாகை, ஏப். 25—

நாகை வெளிப்பாளையம் திருவள்ளுவர் வாசகசாலை அமைப்புக் கூட்டம் 19-3-50ல் நடைபெற்றது. அதுபோது கீழ்க்காணும் செயற்குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்- என். அம்பலவாணர், உபதலைவர், பொருளாளர்- எஸ். என். ஷேக்சர்வர், செயலாளர்-எம். ராசு, துணைச் செயலாளர்- எம். கோபால்சாமி. மற்றும 17 பேர் நிர்வாகக்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.